நாள்: 25.07.2025
O.S. No. 42/2021
பெயர்: மகமதா பீவி க/பெ. முகமது சுல்தான்
வா.சா.1

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை :–</u>

மயிலாடுதுறை நீதிமன்றத்தில் பாக பிரிவினை வழக்கு யார் தொடர்நத்து என்றால் எனது மாமா ஹபிப் முகமது தொடர்ந்தார். அவ்வழக்கில் தீர்பான பின்னர் சொத்தை பிரித்து கொடுக்க கோரி உத்தரவானது. அவ்வாறு தீர்ப்பான விவரத்தை இவ்வழக்கில் கூறாததற்கு என்ன காரணம் என்றால் குறிப்பிட்ட காரணம் எதுவும் இல்லை. விவரத்தை சொன்னது முகமது கௌசு. ஜமீரா பீவியின் கணவர் தான் முகமது கௌசு என்றால் சரிதான். முகமது கௌசு ன் பூர்விகம் எரவாஞ்சேரி கிராமம் என்றாலும் தற்போது அவர்கள் திருச்சியில் தென்னுரில் வசிக்கிறார் என்றாலும் சரிதான். முகமது கௌசு கடந்த 1999 ம் ஆண்டில் இறந்துவிட்டார். முகமது கௌசு இறந்து 12 வருடங்களுக்கு பிறகு தான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நாகப்பட்டினம் நீதிமன்றத்தில் தீர்ப்பின் நகலை வாங்கினேன் என்றால் வாங்கினேன். தீர்ப்பில் யாருக்கு பாகம் வழங்கப்பட்டது என்றால் எனது அம்மா ஹாஜிரா அம்மாவுக்கு பாகம் வழங்கினார்கள். முகமது கௌசு க்கு மகன்கள் உள்ளார்களா என்றால் உள்ளார்கள். தற்போது அவரது மகன் என்னுடன் நீதிமன்றத்திற்கு வந்துள்ளார் என்றால் சரிதான். ஹாஜிரா அம்மாள் பாகத்திற்கு தான் இவ்வழக்கை தொடர்ந்துள்ளேன் என்றால் சரிதான். ஹாஜிரா அம்மாளுக்கு முகமது சுல்தான் எனும் கணவர் இருக்கிறார் என்றால் சரிதான். அவர் தற்போது உள்ளாரா என்றால் இல்லை இறந்துவிட்டார். அவர்களின் வாரிசுகளை இவ்வழக்கில் சேர்த்துள்ளேனா என்றால் நான் மட்டும் தான் அவர் வாரிசு. ஹாஜிராவின் வாரிசு சான்று பெற்றுள்ளேனா என்றால் பெற்றுள்ளேன். எனக்கு குடும்ப அட்டை மற்றும் வாக்காளர் அட்டை உண்டு என்றால் சரிதான். அவை திருச்சி முகவரியில் உள்ளது என்றால் இல்லை மாப்பிள்ளைக்குப்பம் கதவு எண். 48 என்ற முகவரியில் உள்ளது. மின்சார கட்டணம் செலுத்துவதற்கான அட்டை உள்ளதென்றால் உள்ளது. அந்த அட்டையை இவ்வழக்கில் தாக்கல் செய்ய இயலும் என்றால் இயலும். பிரதிவாதியாக அப்துல் பாரி என்பவரை சேர்த்துள்ளேன் என்றால் சரிதான். அவரை எவ்வளவு வருடங்களாக தெரியும் என்றால் பிறந்தது முதல் தெரியும். வீட்டில் சென்று பிரச்சனை செய்தது தொடர்பாக காவல்நிலையத்தில் புகார்

அளித்தேனா என்றால் இல்லை ஊர் பெரியவர்களிடம் முறையிட்டேன். அவ்வாறு முறையிட்டதற்கு ரசீது உள்ளதா என்றால் உள்ளது. நாகப்பட்டினத்தில் பெற்ற தீர்ப்பின் நகலை தாக்கல் செய்ய இயலுமா என்றால் இயலும். நான் மாப்பிள்ளைக்குப்பம் பள்ளிவாசல் தெருவில் வசிக்கவில்லை என்றாலும் அப்துல் பாரி தான் வசிக்கிறார் என்றாலும் சரியல்ல அவர் பக்கத்து தெருவில் வசிக்கிறார். நான் திருமணம் ஆகி சென்றது எந்த ஊர் என்றால் ஒன்பது வேலி ஆகும் ஆனால் அங்கு சென்று 50 வருடங்களாகிறது. ஒன்பது வேலியில் எனது கணவர் வீடு எந்த தெருவில் உள்ளதென்றால் பள்ளிவாசல் தெருவில் உள்ளது. எனக்கும் எனது கணவருக்கும் பிள்ளைகள் உண்டா என்றால் இல்லை. நான் மாப்பிள்ளைக்குப்பத்தில் வசிக்கவில்லை என்றால் சரியல்ல. எனக்கு வழக்கு தொடர்வதற்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. அப்துல் பாரி தற்போது வெளிநாட்டில் வசிக்கிறார் என்றால் சரிதான். மாஸ்க் தெரு, பள்ளிவாசல் தெரு இரண்டும் ஒன்று தான் என்றால் சரிதான். நான் பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

M S BHARATHIDHASAN

Digitally signed by M S BHARATHIDHASAN
DN: cn=M S BHARATHIDHASAN, ou=TIRUVARUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamilnadu, c=IN
Date: 2025.08.24 09:32:02 +0530